# உதவி அமர்வு நீதிமன்றம், கோவில்பட்டி.

## S.C No.56/2018

| | |
|---|---|
| பெயர் | .. வெயிலுமுத்து(அசா4) |
| த/பெ. க/பெ | .. |
| கிராமம் | .. |
| தாலுகா | .. |
| தொழில் | .. |
| வயது | .. |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம் 2025 ஆண்டு ஜனவரி மாதம் 21 ம் நாள்இந்நீதிமன்ற உதவியாளர் ஜி.கார்த்திகா அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.
21.01.2025

**முதல் விசாரணை:**

நான் வெள்ளான்கோட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையதா என்றால் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**பிறழ்சாட்சி:**

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதியதால் அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீஸ் என்னை விசாரித்ததாகவும், போலீஸ் விசாரணையில் கடந்த 12.04.2017 தேதி பகல் 1.30 மணிக்கு கயத்தார் காவல்நிலைய கு.எண்.122/2017 வழக்கின் எதிரி செண்பகன் மகன் குருசாமி என்பவரை விசாரிக்கும்போது சாட்சிகளாக இருக்க

என்னையும், ஆவுடையப்பன் மகன் சின்னமகராஜன் என்பவரையும், போலிசார் அழைத்ததின் பேரில் காவல்நிலையம் சென்றதாகவும், அப்போது எதிரி குருசாமி என்பவர் தானாகமுன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாகவும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை எங்கள் முன்னிலையில் எதிரி எடுத்து ஆஜர்படுத்தியதில் நானும், மற்றொரு சாட்சியான சின்னமகராஜன் என்பவரும் ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும், கையெழுத்து செய்ததாக கூறிவிட்டு தற்போது எதிரிக்கு பயந்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**: இல்லை.

(ஒம்)D.மாரிக்காளை,B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.